# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

12

இலங்கையர்களுடைய அரசியல் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்காக டொனமூரும் அவரது குழுவினரும் கொழும்பிலும், தென்பகுதியிலும் அதற்கான கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் - யாழ்ப்பாண மக்கள் ஏறக்குறைய அவர்களை பகிஸ்கரித்துவிட்டு, மகாத்மா காந்தியை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்து கொண்டிருந்தனர்.

மகாத்மா காந்தி கொழும்பு, கண்டி, காலி ஆகிய இடங்களுக்குச் சென்று உரையாற்றிவிட்டு 1927- ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு சென்றார். அங்கே அவருக்கு மற்ற இடங்களில் இல்லாத அளவுக்கு மிகப் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. முழுக்க முழுக்க காந்தி அலை யாழ்ப்பாணத்தில் வீசியது.

காந்தியினுடைய கதர் இயக்கத்துக்கு யாழ்ப்பாண மக்கள் ஐந்து சதம், பத்து சதம், ஐம்பது சதம், ஒரு ரூபா என்ற கணக்கில்- தங்கள் வசதிக்கு ஏற்றபடி வாரி வழங்கினார்கள். அவ்வாறு அவர்கள் வழங்கிய நிதி 18 ஆயிரம் ரூபாவை எட்டியது. இது அக் காலத்தில் மிகப் பெரிய தொகையாகும்.

ஒரு வாரங்கள் இலங்கையில் தங்கியிருந்த டொனமூர் குழுவினருக்கு, யாழ்ப்பாணத்தில் நிலவிய இந்தக் காந்தி அலை எரிச்சலையூட்டியது. அவர்கள் அந்த அலையைத் தொடரவிட்டால் இந்தியாவுடன் இலங்கை இணைந்து விடும் அபாயம் ஏற்பட்டுவிடும் என்று நினைத்தார்கள். இந்தியாவை கண்காணிக்கும் காவலரணாக இலங்கையை வைத்திருப்பது என்ற தங்களது



தந்திரோபாயம் பிழைத்துப் போய்விடும் என்று பயந்தார்கள்.

எனவே- ஏற்கனவே இலங்கையில் இருந்த இனவாரி பிரதிநிதித்துவ அரசியலமைப்பை நீக்கிவிட்டு சிங்களவர்களுக்கு அதிகாரத்தை வழங்கி தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக்கும் புதிய அரசியல் அமைப்பு வடிவம் ஒன்றை

டொனமூர் இலங்கைக்கு சிபார்சு செய்தார்.

இந்த அமைப்பில் 'பிரான்ஸ் முதலான ஐரோப்பிய நாடுகளில்

**டொனமூர் குழுவினருக்கு, யாழ்ப்பாணத்தில் நிலவிய இந்தக் காந்தி அலை எரிச்சலையூட்டியது. அவர்கள் அந்த அலையைத் தொடரவிட்டால் இந்தியாவுடன் இலங்கை இணைந்து விடும் அபாயம் ஏற்பட்டுவிடும் என்று நினைத்தார்கள். இந்தியாவை கண்காணிக்கும் காவலரணாக இலங்கையை வைத்திருப்பது என்ற தங்களது தந்திரோபாயம் பிழைத்துப் போய்விடும் என்று பயந்தார்கள்.**

பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப் படாதிருந்த அந்தக் காலத்தில்' இலங்கையிலிருந்த வயது வந்த ஆண் பெண் இரு பாலாருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்குமாறு சிபார்சு செய்யப்பட்டது.

அதைவிட சட்டசபை ஒன்

ணித்ததனாலேயே அவர்கள் தமிழர்களுக்கு பாதகமான முடிவுகளை எடுத்தார்கள் என்றும் தமிழர் தரப்பிலிருந்த சில பிரித்தா

னிய விசுவாசிகள் விமர்சனம் வைத்திருந்தனர்.

ஆனால் உண்மையில் தமிழரையும், சிங்களவரையும் சமமாகப் பாவித்து அவர்களை ஒற்றுமைப்படுத்தி இனவாதத்திற்கு அப்பாற்பட்ட, ஒன்றுபட்ட இலங்கை ஒன்றை உருவாக்க

மையை முழு விசையுடன் ஆதரிப்பதே நமது முயற்சியாக இருக்க வேண்டுமன்றி; அவற்றை இணைப்பதாக இருக்கக்கூடாது. நாட்டை பிரித்தாள வேண்டும் என்பதே (நம்) அரசின் கொள்கையாக இருக்க வேண்டும்'

உண்மையில், பிரித்தானிய காலனிய அரசு, முதலில் சிங்களவர்களைப் பிரித்து வைத்து ஆள வேண்டும் என்பதற்காக கரையோரச் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் சலுகைகளை வழங்கி கண்டியச் சிங்களவர்களைப் புறக்கணித்தது. பின்னர் தமிழர்கள் மகாத்மாகாந்தியுடன் தொடர்பு வைத்திருக்கிறார்கள். இந்திய தேசியக் காங்கிரசை ஆதரிக்கிறார்கள் என்று தெரிந்தவுடன் தமிழர்களை அரசியல் ரீதியாகப் புறக்கணித்து கண்டியச் சிங்களவர்களையும், கரையோரச் சிங்களவர்களை ஒன்று சேர்க்க முனைந்தது.

தென் பகுதியில் உருவான பௌத்த மறுமலர்ச்சி இயக்கம், சிங்களவர்களை ஒன்றிணைக்க முயன்ற போதும், கரையோரச் சிங்களவர்கள் ஆங்கிலேய தாசர்களாக இருந்தது, கண்டியச் சிங்களவர்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்தது. அவர்கள் கண்டியச் சங்கம் என்ற ஒரு அமைப்பை உருவாக்கி டொனமூரிடம் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து தங்களுக்கு தனியான பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர்.

டொனமூர் ஆணைக்குழு

ரிகை கூறுகின்றது. இப்போது ஒரு சந்தர்ப்பம் எம்மை நாடி வந்துள்ளது. நாம் ஏன் இதனை ஏற்கக்கூடாது?' என்று சிங்கள மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

அப்போது தமிழர் தலைவர்களின் ஒருவராக இருந்த சேர். பொன் இராமநாதன் முதலில் கொழும்பிலும், பின்னர் லண்டனிலும் பிரித்தானிய அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியும்



அறிக்கைகள் சமர்ப்பித்தும் டொனமூர் அரசியலமைப்பு எவ்வாறு தமிழர் நலன்களை பாதிக்கின்றது என்பதை எடுத்துரைத்தார்.

ஆனால் அவர் முழுக்க முழுக்க நம்பிய ஆங்கிலேய எஜமானர்கள் அவரது கோரிக்கைகளை ஏற்க மறுத்துவிட்டனர்.

குடியேற்ற நாடுகளுக்கான மந்திரியாக இருந்த பஸ்பீல்ட் பிரபுவை (Lord Pass Field) இரா

# யாழ்ப்பாணத்தில் நடந்த முதல் தேர்தல் புறக்கணிப்பு

றும் (State Council) நிர்வாகக் கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திய டொனமூர் இந்த இரண்டு அமைப்புக்களிலும் சிங்களவர்களுக்கே அதிக பிரதிநிதித்துவம் கிடைக்க வழி செய்யுமாறு பார்த்துக் கொண்டார்.

இலங்கையில் ஏற்கனவே இருந்த இனவாரிப் பிரதிநிதித்துவத்தை குறை கூறிய டொனமூர் தாங்கள் இன ரீதியாக மக்களை பிரிக்க விரும்பவில்லை என்பதை நியாயப்படுத்துவதற்கும் ஒரு சமாளிப்புக் காரணத்தையும் சொல்லியிருக்கிறார்.

'பல்வேறு இனங்களும் சமயங்களும் இருந்த நாடுகளில் மக்களாட்சி முறையை வளர்ப்பதற்காக, தேர்தலின் போது பல பகுதியினரிடையே மோதலைத் தவிர்க்கும் பொருட்டு இனவாரிப் பிரதிநிதித்துவ முறை அமைக்கப்பட்டது. அது சமூகத்திலுள்ள பல்வேறு மக்களினத்தாருக்கும் நற் பிரதிநிதித்துவம் அளித்து மக்களிடம் ஒற்றுமையை வளர்க்கும் என எதிர்பார்க்கப்பட்டது' என்ற டொனமூரின் இந்தக் கூற்று நகைப்புக்கிடமான ஒன்றாகும்.

மக்களாட்சி முறையை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் டொனமூருக்கு இருந்ததென்றும் யாழ்ப்பாணத்திலிருந்த வாலிபர் காங்கிரஸ் பொருத்தமற்ற நேரத்தில் மகாத்மா காந்தியை வரவழைத்து டொனமூர் ஆணைக்குழுவை புறக்க

வேண்டும் என்ற எண்ணம் டொனமூருக்கு மட்டுமல்ல, பிரித்தானிய அரசுக்கோ அதன் எந்த அதிகாரிகளுக்குமோ கிடையாது.

அவர்களுடைய நோக்கமெல்லாம் இலங்கையில் தமிழர்களையும், சிங்களவர்களையும் தொடர்ந்து மோதவிட்டு அந்த

**சிங்களத் தலைவர்களில் ஒருவரான பரன் ஜெயதிலக 1929-ம் ஆண்டு கம்பளையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் 'முழு யாழ்ப்பாணத்தவர்களும், இந்தியர்களும், முஸ்லீம்களும், பறங்கியர்களும் டொனமூரின் அரசியல் சீர்திருத்தத்தை எதிர்க்கின்றனர். சிங்களவர்களின் நாடு, சிங்களவர்களால் ஆளப்பட வேண்டும் என்று லண்டன் ரைம்ஸ் பத்திரிகை கூறுகின்றது. நாம் ஏன் இதனை ஏற்கக்கூடாது?'**

மோதலில் தங்களுடைய காலனிய நலனை பேணிக் கொள்வதாகவே இருந்தது.

அரசியல்வாதியான டொனமூர் இதை பூசி மெழுகி மூடி மறைத்தாலும் பிரித்தானிய இராணுவத்தைச் சேர்ந்த லெப்டினன்ட் கேணலான கொக் என்பவர் இதை வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார்.

'பல்வேறு சமயங்கள், இனங்களுக்கிடையிலான வேற்று

இந்தக் கோரிக்கையை இனவாதக் கோரிக்கை என்று கூறி நிராகரித்துவிட்டது.

இதனால் ஆத்திரம்கொண்ட கண்டிய சங்கம், டொனமூர்' அரசியல் திட்டத்தை புறக்கணிக்குமாறு சிங்கள மக்களுக்கு கோரிக்கை விடுத்தது.

அப்போது இருந்த சிங்களத் தலைவர்களில் ஒருவரான ப்ரன் ஜெயதிலக 1929-ம் ஆண்டு கம்பளையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் 'முழு யாழ்ப்பாணத்தவர்களும், இந்தியர்களும், முஸ்லீம்களும், பறங்கியர்களும் டொனமூரின் அரசியல் சீர்திருத்தத்தை எதிர்க்கின்றனர். சிங்களவர்களின் நாடு, சிங்களவர்களால் ஆளப்பட வேண்டும் என்று லண்டன் ரைம்ஸ் பத்தி

மநாதன் லண்டனில் சந்தித்து தனது கோரிக்கையை முன் வைத்தபோது...

'அரசாங்கம் இந்த அரசியல் திட்டத்தை ஆதரிக்கிறது. அதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய சகல ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன' என்று திட்டவட்டமாகக் கூறியதுடன் நீங்கள் விரும்பினால் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து அவர்களுக்கு விடயத்தை எடுத்துச் சொல்லுங்கள். பாராளுமன்றம் இத்தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யத் தீர்மானித்தால் அதனை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வேன்' என்று தந்திரமாக தட்டிக் கழித்துவிட்டார்.

இராமநாதன் இவ்வாறு லண்டனில் ஆங்கிலேயர்களிடம், தமிழர்களின் உரிமைக்காக பேரம் பேசிக் கொண்டிருந்த போது யாழ்ப்பாணத்தில் வாலிபர் காங்கிரஸ் டொனமூர் அரசியல் சட்டத்தை நிராகரித்து அதன் கீழ் நடத்தப்பட்ட முதலாவது தேர்தலைப் பகிஸ்கரித்தது. 1931-ம் ஆண்டு நடத்தப்பட்ட முதலாவது தேர்தலுக்கு போட்டி மனு தாக்கல் செய்ய யாழ்ப்பாணத்திலிருந்த சில தலைவர்கள் கச்சேரிக்கு சென்ற போது வாலிபர் காங்கிரஸ் உறுப்பினர்கள் அவர்களை தடுத்து நிறுத்தி போட்டி மனுக்களை கிழித்து வீசினர்.

**- நக்கீரன்**